සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்கத் திருமறை I, II
Catholicism I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கத்தோலிக்கத் திருமறை I

அறிவுறுத்தல்கள் :

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ✳ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** திருவிவிலியத்தில் உள்ளடங்கியுள்ள இறைவாக்கினர் நூல்
(1) ஒபதியா (2) யோசுவா (3) யோபு (4) தானியேல்

**2.** திருத்தூதர் பணிகள் நூல் கிரேக்க தேசத்தில் எந்த நகரத்தில் எழுதப்பட்டது?
(1) எதென்ஸ் (2) அக்காயா (3) திறிப்போலிஸ் (4) கொரிந்தி

**3.** புனித பவுலின் கடிதங்களின் எண்ணிக்கை
(1) 13 ஆகும். (2) 14 ஆகும். (3) 16 ஆகும். (4) 21 ஆகும்.

**4.** சிரியப் பேரரசில் IV ஆம் அந்தியோக்கஸின் ஆட்சியில் யூதர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்த காலத்தில் எழுதப்பட்ட நூல்
(1) எரேமியா (2) எசாயா (3) நெகெமியா (4) தானியேல்

**5.** வாழ்க்கையின் அர்த்தம், அதன் சிக்கல்கள், தீர்வுகள் பற்றிய எண்ணக்கருக்களை உள்ளடக்கிய பகுப்பாய்வு
(1) அரச ஞானம் (2) ஆன்மீக ஞானம்
(3) குடும்பம் மற்றும் கோத்திர ஞானம் (4) அன்றாட வாழ்க்கை பற்றிய ஞானம்

**6.** புனித பேதுருவின் வெளிப்பாடு பற்றி இயேசு கூறிய பதில், அவர் யூதர்களிடம் காட்டிக்கொடுக்கப்பட்ட பின்னர்,
(1) பிலாத்து அரசன் முன்னிலையில் நிறைவேறியது.
(2) ஏரோது அரசன் முன்னிலையில் நிறைவேறியது.
(3) கெத்சமனி தோட்டத்தில் நிறைவேறியது.
(4) தலைமைக் குருவின் வீட்டில் நிறைவேறியது.

**7.** திருச்சபையின் முதல் மறைசாட்சியானவர்
(1) புனித மாற்கு (2) புனித பேதுரு
(3) புனித ஸ்தேபான் (4) புனித பெரிய யாகப்பர்

**8.** யூதமதம், சட்டங்கள், ஒழுங்குகள் என்பன தொடர்பான ஆழ்ந்த அறிவுடையவராகக் காணப்பட்டவர்
(1) புனித லூக்கா (2) புனித பவுல் (3) புனித மத்தேயு (4) புனித பர்னபா

**9.** 1936 இல் ஆஜன்டீனாவில் பிறந்து, ஜோர்ஜ் மாரியோ பர்காலியோ என்னும் பெயருடன் காணப்பட்டு, பின்னர் திருச்சபையின் திருத்தந்தையானவர்
(1) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை I ஆவது பிரான்சிஸ் ஆவார்.
(2) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை II ஆவது அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
(3) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை XIV ஆவது லியோ ஆவார்.
(4) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை XVI ஆவது பெனடிக் ஆவார்.

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**10.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்டது.
B - இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களால் உருவானது.
C - தூய ஆவியினால் வழிநடத்தப்படுகிறது.
D - இயேசு கிறிஸ்து திருச்சபையில் உடனிருப்பது.
E - கிறிஸ்து நாதரால் முழு மனுக் குலத்திற்கும் அனுப்பப்படுவது.

மேலுள்ளவற்றுள் திருச்சபையின் கத்தோலிக்கத்துவத்தை வெளிப்படுத்தும் கூற்றுக்களின் சோடியைத் தெரிவுசெய்க.

(1) A, B (2) B, C (3) C, D (4) D, E

**11.** புனித யோசப்வாஸ் அடிகளார் உரித்தாகும் துறவறசபை

(1) கார்மேல் சபை (2) டொமினிக்கன் சபை
(3) ஒறத்தோரியன் சபை (4) பிரான்சிஸ்கன் சபை

**12.** திருவிவிலியத்தில் “இந்நிலையில் நீங்கள் ஒன்றாகக் கூடிவந்து உண்பது ஆண்டவரின் திருவிருந்து அல்ல ஏனெனில்...” என குறிப்பிடப்படுவது

(1) உரோமையர் திருமுகத்திலாகும். (2) எபேசியர் திருமுகத்திலாகும்.
(3) கொரிந்தியர் திருமுகத்திலாகும். (4) தெசலோனிக்கர் திருமுகத்திலாகும்.

**13.** நற்செய்தியாளர்கள் நால்வரும் குறிப்பிடும் ஒரே அருங்குறி

(1) கடலின் மீது நடந்த அருங்குறியாகும்.
(2) அப்பங்களைப் பலுக்கச் செய்த அருங்குறியாகும்.
(3) யாயீரின் மகளைக் குணமாக்கிய அருங்குறியாகும்.
(4) தொழுநோயாளர் பத்துப் பேரைக் குணமாக்கிய அருங்குறியாகும்.

**14.** இயேசுவின் இறுதி இரா உணவிற்குப் பதிலாக புனித யோவான் தமது நற்செய்தியில் குறிப்பிடும் சம்பவம்

(1) தேவாலயத்தைத் தூய்மைப்படுத்துதல் (2) தண்ணீரை இரசமாக்குதல்
(3) பாவிப் பெண்ணுக்கு மன்னிப்பளித்தல் (4) சீடர்களின் பாதங்களைக் கழுவுதல்

**15.** பழைய ஏற்பாட்டில் பலி செலுத்துவதற்காக உணவு வகைகள், பான வகைகள், மிருகங்கள், எண்ணெய் என்பன பயன்படுத்தப்பட்ட போதும், அவற்றுள் முக்கியமானதாக விளங்கியது

(1) மிருகப் பலியாகும். (2) தானியப் பலியாகும்.
(3) உணவு, பானப் பலியாகும். (4) எண்ணெய்ப் பலியாகும்.

**16.** பாவ இச்சைகளிலிருந்து மனிதனை விடுவிக்க உதவும் விடயம்

(1) பொய் பேசுவதைத் தவிர்த்தல் (2) களவு செய்வதைத் தவிர்த்தல்
(3) எப்போதும் அமைதியைப் பேணிச் செயற்படுதல் (4) ஒரே கடவுளை மட்டும் ஆராதித்தல்

**17.** தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறுவது எத்தனையாவது கட்டளைக்கு எதிரான பாவமாகும்?

(1) முதலாம் கட்டளைக்கு (2) இரண்டாம் கட்டளைக்கு
(3) மூன்றாம் கட்டளைக்கு (4) நான்காம் கட்டளைக்கு

**18.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - மற்றவர்களின் எதிர்காலத்தைப் பாழடையச் செய்தல்
B - பொதுச் சொத்துக்களை அழித்தல்
C - பொய் வழக்குகளைத் தொடரல்
D - ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படியாமை

இவற்றுள் ஐந்தாம் கட்டளைக்கு எதிரான செயல்களின் சோடி

(1) A, B (2) A, C (3) B, C (4) B, D

**19.** ‘இறைவனின் நடுநிலையாளர்’ என்னும் சுற்றுமடலை வெளியிட்ட திருத்தந்தை

(1) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை XII ஆவது பத்திநாதர்
(2) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை XIII ஆவது அருளப்பர்
(3) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை XIII ஆவது சிங்கராயர்
(4) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை XI ஆவது பத்திநாதர்

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**20.** எதிர்காலத் திரு அவையின் ஒற்றுமைக்காக இயேசு செபித்தது
(1) திரு அவை உலகெங்கும் பரவிச் செல்வதனாலாகும்.
(2) நம்பிக்கையின் காரணமாகப் பல்வேறு இனத்தினர் போரிடுவதனாலாகும்.
(3) எதிர்காலத்தில் திரு அவை பிரிவுகளாக்கப்படும் என்பதை அறிந்திருந்தமையினாலாகும்.
(4) எதிர்காலத்தில் திரு அவையில் கலாபனைகள் ஏற்படும் என அறிந்திருந்தமையினாலாகும்.

**21.** எபிரேய திருவிவிலியத்தை (பழைய ஏற்பாட்டை) கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும் பணியை ஒப்படைத்த அரசன் யார்?
(1) நெபுகத்னேசர்
(2) திமிரியஸ் என்னும் இரண்டாம் தொலமி
(3) பெரிய அலெக்சாண்டர்
(4) தேயுஸ் என்னும் இரண்டாம் அந்தியோக்கஸ்

**22.** இறைவனுக்காகப் பேசி அவரது செய்தியை மக்களுக்கு அறிவித்த குழுவினர்
(1) குல முதுவர்கள் (2) மக்கள் தலைவர்கள்
(3) இஸ்ரயேல் இறைவாக்கினர் (4) திருத்தொண்டர்கள்

**23.** எல்லாம் வல்ல இறைவனைத் தமது கண்களால் கண்டதாகக் குறிப்பிட்ட இறைவாக்கினர்
(1) எசேக்கியேல் (2) எசாயா (3) எரேமியா (4) ஓசேயா

**24.** இறைவனின் செய்தியை அடையாளம் மூலம் பெற்றுக்கொண்ட இறைவாக்கினர்
(1) எசாயா (2) யோவேல் (3) எசேக்கியேல் (4) எரேமியா

**25.** செபதேயு மற்றும் சலோமையின் புதல்வர்கள் இருவரும் யாவர்?
(1) யோவான், யாக்கோபு (2) யாக்கோபு, அந்திரேயா
(3) பேதுரு, யோவான் (4) யாக்கோபு, பேதுரு

**26.** மனிதனுக்குத் தமது அன்பையும் பாதுகாப்பையும் வெளிப்படுத்த இறைவன் பயன்படுத்திக்கொண்டது
(1) திருச்சபையின் சட்டத்தொகுப்பையாகும். (2) திருச்சபையின் கட்டளைகளையாகும்.
(3) இயற்கையையாகும். (4) பேறுகள் எட்டையுமாகும்.

**27.** இறைவன் நோவாவுடனும் ஆபிரகாமுடனும் செய்துகொண்ட உடன்படிக்கைகளின் வெளி அடையாளங்களாவன
(1) வானவில்லும் விருத்த சேதனமும் (2) பெருவெள்ளமும் வானவில்லும்
(3) வானவில்லும் எரியாத முட்செடியும் (4) விருத்த சேதனமும் நெருப்புத் தூணும்

**28.** திருமுழுக்கு யோவானின் பிறப்பு வானதூதர் மூலம் யாருக்கு அறிவிக்கப்பட்டது?
(1) மரியாளுக்கு (2) யோசேப்பிற்கு
(3) அகுஸ்தினாருக்கு (4) செக்கரியாவிற்கு

**29.** கலிலேயாவின் குறுநில மன்னன் ஏரோதின் தவறான செயலைப் பகிரங்கமாகக் கடிந்துகொண்டவர்
(1) புனித பேதுரு (2) புனித திருமுழுக்கு யோவான்
(3) புனித யோவான் மாற்கு (4) புனித பவுல்

**30.** கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவோர் எத்தகைய பேறுபெற்றோராவர்?
(1) கனிவுடையோர் (2) நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர்
(3) அமைதியை ஏற்படுத்துவோர் (4) தூய்மையான உள்ளத்தோர்

**31.** 'நோயாளரின் தூய பூசுதல்' என்னும் அப்போஸ்தலிக்க படிப்பினையை வெளியிட்டவர் யார்?
(1) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை VI ஆவது சின்னப்பர்
(2) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை II ஆவது சின்னப்பர்
(3) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை XIV ஆவது லியோ
(4) அதிமேன்மைதங்கிய திருத்தந்தை பிரான்சிஸ்

**32.** ஆயர்கள் குருக்களின் கீழ் திருத்தொண்டர்கள் நிறைவேற்றும் பணிகள்
(1) பொது நிலையினர் பணிகள் எனப்படும்.
(2) ஆயரின் மேய்ப்புக் கண்காணிப்பின் கீழான பணிகள் எனப்படும்.
(3) திருப்பலிப் பணிகள் எனப்படும்.
(4) திருமுழுக்குப் பணிகள் எனப்படும்.

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**33.** "பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்" எனக் குறிப்பிடப்படுவது
(1) எபேசியர் திருமுகத்திலாகும். (2) யாக்கோபு திருமுகத்திலாகும்.
(3) திருப்பாடல்களிலாகும். (4) நீதிமொழிகளிலாகும்.

**34.** பிரான்சிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர்கள் செய்யும் இரண்டு பணிகளாவன
(1) பங்கில் மறைக்கல்விப் பணியும் கல்விப் பணியும் ஆகும்.
(2) மறைக்கல்வியும் மறையை அறிவித்தலும் ஆகும்.
(3) தோட்டங்களில் பணியும் மருத்துவப் பணியும் ஆகும்.
(4) மறையை அறிவித்தலும் சிறுவர் இல்லங்களை நடாத்துதலும் ஆகும்.

**35.** கிறிஸ்துவின் மறை உடலில் அங்கத்துவம் பெறுவது
(1) திருமுழுக்கு வழியாகவாகும். (2) தேவ நற்கருணை வழியாகவாகும்.
(3) குருத்துவம் வழியாகவாகும். (4) நோயில் பூசுதல் வழியாகவாகும்.

**36.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - வெறுப்புள்ள இடத்தில் அன்பு
B - அமைதியின் ஊடாக வாழ்வைக் கட்டியெழுப்புதல்
C - ஐயமுள்ள இடத்தில் நம்பிக்கை
D - புரிந்துகொள்ளப்படுவதை விடப் புரிந்துகொள்ளல்
E - சாத்தானை தோற்கடித்து கிறிஸ்துநாதரை உரிமையாக்கிக் கொள்ளல்
மேற்குறித்தவற்றுள் அசீசி நகர் புனித பிரான்சிஸியாரின் செபத்தில் அடங்கும் விடயங்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C (2) A, C, D (3) A, D, E (4) B, C, D

**37.** பாஸ்கா, நத்தார், ஆலயத் திருவிழா ஆகியவற்றில் ஆயத்தத்துடன் அருள்நிலையில் பங்குபற்றுவதற்கு
(1) நற்கருணையைப் பெறவேண்டும். (2) ஒரு சந்தி அனுசரிக்க வேண்டும்.
(3) ஒப்புரவு செய்ய வேண்டும். (4) இரக்கச் செயல்களில் ஈடுபடவேண்டும்.

**38.** ஒரு சந்தி அனுசரிப்பதன் நோக்கம்
(1) பத்துக்கட்டளைகளைக் கடைப்பிடித்தல் (2) இரக்கச் செயல்களில் ஈடுபடுதல்
(3) திருச்சபையின் சட்டங்களை அனுசரித்தல் (4) சுய கட்டுப்பாட்டைப் பயிற்றுவித்தல்

**39.** செபத்தின் மூலம் கேட்பது தவறாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் செய்யப்படும் நம்பிக்கை அறிக்கை யாது?
(1) 'இறைவனுக்கே மகிமை!' (2) 'அல்லேலூயா'
(3) 'உம்மோடும் இருப்பாராக' (4) 'ஆமென்'

**40.** பிரான்சில் லூர்து நகரில் மரியன்னை காட்சியளித்தது
(1) பெர்ணதேசத்திற்காகும். (2) ஜசிந்தாவிற்காகும்.
(3) லுசியாவிற்காகும். (4) பிரான்ஸிஸ்சிற்காகும்.

* *

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

| | |
|---|---|
| කතෝලික ධර්මය | I, II |
| கத்தோலிக்கத் திருமறை | I, II |
| Catholicism | I, II |

## கத்தோலிக்கத் திருமறை II

* முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதமும் உரித்தாகும்.

1. (i) திருவெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகளில் ஒன்றான 'இறுதிக்காலத்தில்' நிகழும் **இரண்டு** நிகழ்வுகளை எழுதுக.

(ii) தேசிய கிறிஸ்தவ இலக்கியத்தை வளர்க்க அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் பணியின் **இரண்டு** துறைகளைக் குறிப்பிடுக.

(iii) புனித மக்ஸிமிலியன் கோல்பே அடிகளாருக்குக் காட்சிகொடுத்த மரியன்னையின் கரங்களில் இருந்த சிவப்பு, வெள்ளை நிற முடிகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டது யாது எனக் குறிப்பிடுக.

(iv) ஒழுக்கம் (கற்பு) உடையவராக வாழ கிறிஸ்தவரொருவர் பின்பற்ற வேண்டிய விடயங்கள் **இரண்டு** தருக.

(v) திருப்பலியில் தலைமைதாங்கும் குருவானவரின் செபங்கள் **இரண்டின்** பெயர்களைத் தருக.

(vi) "எனக்குப் பேசத்தெரியாதே, சிறுபிள்ளை தானே" என்ற கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

(vii) வானதூதர் திருமுழுக்கு யோவானின் பிறப்பைப் பற்றி அறிவித்தபோது, அவரைப் பற்றிக் கூறிய முக்கிய விடயங்கள் **இரண்டை** எழுதுக.

(viii) தவச்செயல்கள் **இரண்டை** எழுதுக.

(ix) கட்டிளமைப் பருவத்திலிருக்கும் பிள்ளைகளின் வாழ்வைக் கட்டியெழுப்பி, உறுதிபெறச் செய்யும் **'H'** இனால் குறிப்பிடப்படும் மூலாதாரங்கள் **இரண்டைத்** தருக.

(x) 'லெக்சியோ டிவீனா' (Lectio Divina) தியானத்தின் **இரு** படிமுறைகளை எழுதுக.

2. (i) அன்னை திரேசா வீதியோரங்களில் இருந்த பிள்ளைகளுக்காக ஆரம்பித்த பாடசாலைக்கு வருகைதந்த பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்கியமைக்கு மேலதிகமாக அவர் மேற்கொண்ட வேறு பணிகள் **இரண்டினை** எழுதுக.

(ii) அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார் ஆற்றிய பணிகளில் பிரதானமாக இடம்பெற்ற **மூன்று** துறைகளை எழுதுக.

(iii) உமது வீட்டிற்கு அருகாமையில் வசிக்கும் வறிய குடும்பங்களின் பௌதீகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உம்மால் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக.

3. (i) செபத்தில் நமது மனதை (உள்ளத்தை) இறைவன்பால் உயர்த்தும் செயல்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) இறைவனிடத்தில் மதிப்பினாலும் அன்பினாலும் வாக்குறுதியளிக்கும் அருளடையாளங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) இயற்கை அனர்த்தங்களுக்குள்ளான மக்களின் ஆன்மீக விடுதலைக்காக மேற்கொள்ளத்தக்க செயல்கள் **ஐந்தைச்** சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

4. (i) தவறாது திருப்பலியில் பங்குபற்ற வேண்டிய நாட்களைக் குறிப்பிடுக.

(ii) வார்த்தை வழிபாட்டுப் பகுதிக்குள் அடங்கும் பிரிவுகள் **மூன்றினை** எழுதுக.

(iii) நீர், ஞாயிறு திருப்பலியில் கருத்துள்ள முறையில் பங்குபற்ற உம்மைத் தயார்படுத்தும் விதத்தை **ஐந்து** விடயங்களின் ஊடாக விளக்குக.

5. (i) பாலைநிலத்தில் இயேசு முகங்கொடுத்த முதலாவது, மூன்றாவது சோதனைகளின்போது அவர் வழங்கிய பதிலைக் குறிப்பிடுக.

(ii) சோதனைகளை வெற்றிகொண்ட இயேசு, தமது தூதுரைப் பணியைத் தொடங்கிச் செய்த அருங்குறிகள் **மூன்றினைத்** தருக.

(iii) கிறிஸ்தவ மாணவராகிய நீர், பாவச் சோதனைகள் மற்றும் தீய சக்திகளின் ஆதிக்கம் நிறைந்த சமுதாயத்தில், கிறிஸ்தவ அழைப்பின்படி வாழும் விதத்தை **ஐந்து** விடயங்களினூடாக விளக்குக.

6. (i) ‘கர்த்தர் கற்பித்த செபத்தை’ தமது நற்செய்திகளில் அறிக்கைப்படுத்தும் நற்செய்தியாளர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

(ii) ‘கர்த்தர் கற்பித்த செபத்தின்’ கட்டமைப்புகள் **மூன்றினை** எழுதுக.

(iii) உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலியில் செபிக்கக்கூடிய ‘நம்பிக்கையாளர் மன்றாட்டுக்கள்’ **ஐந்தினை** எழுதுக.

7. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலங்கையின் அப்போஸ்தலர்

(ii) திருவழிப்பாட்டு ஆண்டு

(iii) மக்கள் தலைவர் மோசே

(iv) திருமணமும் சிவில் சட்டமும்

* * *

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/